

ஆத்தூர் தொகுதியில் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்ற ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி விரைந்து நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதியளித்தார். உடன் ம.தி.மு.க. மாவட்டச் செயலாளர் செல்வராகவன் உள்ளார்.

பொது கலந்தாய்வு மூலமே மருத்துவப் படிப்பு கலந்தாய்வா?

# மாநில உரிமைகள்மீது மற்றுமொரு தாக்குதல்!

## ‘தீக்கதிர்’ நாளேடு தலையங்கத்தில் கண்டனம்!

**சென்னை, ஜூன் 14 - பொது கலந்தாய்வு மூலமே மருத்துவப் படிப்பிற்கான கலந்தாய்வு என்கிற தேசிய மருத்துவ ஆணையத்தின் அறிவிப்பானது; மாநில உரிமைகள்மீதானமற்றொரு தாக்குதல் ஆகும் என்று ‘தீக்கதிர்’ நாளேடு கண்டித்து தலையங்கம் எழுதியுள்ளது.**



தீக்கதிர்
2023 ஜூன் 13 செவ்வாய்க்கிழமை
மாநில உரிமைகள் மீது மற்றுமொரு தாக்குதல்
நாடு முழுவதும் இளநிலை மற்றும் முது நிலை மருத்துவப் படிப்பிற்கான இடங்கள் அனைத்தையும் பொதுக் கலந்தாய்வு மூலம் தேசிய மருத்துவ ஆணையமே நிரப்பும் என தேசிய மருத்துவ ஆணையம் அறிவித்துள்ளது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது. இது மாநில உரிமைகளில் தலையிடும் போக்கு என்பதோடு, தமிழகம் உள்ளிட்ட மாநிலங்களின் நடைமுறையில் உள்ள இடஒதுக்கீட்டு முறையை படிப்படியாக ஒழித்துக் கட்டவும் வழி வகுக்கும் ஆபத்தான திட்டமாகும். இதை முளையிலேயே கிள்ளி எறிய வேண்டும்.

அது வருமாறு:

நாடுமுழுவதும்இளநிலை மற்றும் முது நிலை மருத்துவப் படிப்பிற்கான இடங்கள் அனைத்தையும் பொதுக் கலந்தாய்வு மூலம் தேசிய மருத்துவஆணையமேநிரப்பும் என தேசிய மருத்துவ ஆணையம் அறிவித்துள்ளது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது. இது மாநில உரிமைகளில் தலையிடும் போக்கு என்பதோடு, தமிழகம்உள்ளிட்டமாநிலங்களில் நடைமுறையில் உள்ள இட ஒதுக்கீட்டு முறையை படிப்படியாக ஒழித்துக் கட்டவும் வழி வகுக்கும் ஆபத்தான திட்டமாகும். இதைமுளையிலேயே கிள்ளி எறிய வேண்டும்.

அனைத்து மருத்துவப் படிப்பிற்கானஇடங்களையும் நீட்மதிப்பெண்தரவரிசைபட்டியல்அடிப்படையில்பொதுக் கலந்தாய்வு மூலம் நிரப்பப் போவதாக தேசிய மருத்துவ ஆணையம் தெரிவித்துள்ளது. இதற்கானசுற்றறிக்கை மாநில அரசுகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது. மாநிலஅரசுகளுடன் கலந்தாலோ சிக்காமல் இந்த முடிவை ஒன்றிய அரசு தன்னிச்சையாக எடுத்துள்ளது.

தற்போதுஇளநிலைமருத்துவப்படிப்புகளில்அரசுமருத்துவக் கல்லூரிகளில் 15 சதவீதமும், முதுநிலை படிப்புகளுக்கு 50 சதவீதமும் அகில இந்திய ஒதுக்கீட்டிற்கு ஒதுக்கப்படுகிறது. மீதமுள்ளஇடங்கள்அந்தந்தமாநிலஅரசுகள் மூலம் நிரப்பப்படுகின்றன. அகில இந்திய ஒதுக் கீட்டை முற்றாக ரத்து செய்ய வேண்டும்என்றகோரிக்கைவலுவடைந்துள்ள நிலையில், மொத்தஇடங்களையும்ஒன்றிய அரசு கபளீகரம் செய்ய முயல்கிறது.

முதுநிலை மருத்துவப் படிப்புகளில் பிற்படுத்த ப்பட்டோருக்கான இடஒதுக்கீட்டை நடைமுறைப்படுத்த ஒன்றிய அரசு மறுத்தது. இதை எதிர்த்து தொடுக்கப்பட்ட வழக்கிலும் தன்னுடைய சமூக நீதிக்கு எதிரான நிலைபாட்டைஒன்றியஅரசு நியாயப்படுத்தியது.

ஒன்றிய அரசின் கல்வி நிறுவனங்கள், நிகர் நிலை பல்கலைக்கழகங்களில்ஒன்றிய அரசு கலந்தாய்வு மூலமேமருத்துவமாணவர் சேர்க்கை நடைபெறுகிறது. இப்போதுமாநிலஅரசுகளின் கட்டுப்பாட்டில் உள்ள அனைத்து இடங்களையும் ஒன்றிய அரசு எடுத்துக் கொள்ள முயல்கிறது.

தமிழ்நாட்டில் 69 சதவீத இடஒதுக்கீடும்பின்பற்றப்படுவதோடு பட்டியல் பிரிவு மாணவர்களுக்கான இட ஒதுக்கீட்டில் அருந்ததியர்களுக்கு உள்ஒதுக்கீடும், பிற்படுத்தப்பட்டோர் இட ஒதுக்கீட்டில் இஸ்லாமியர்க்கு உள் ஒதுக்கீடும் உள்ளது. அரசுப் பள்ளிகளில் பயின்ற மாணவர்களுக்கு 7.5 சதவீத இட ஒதுக்கீடும் அவர்களுக்கு மாநில அரசே கட்டணம் செலுத்தும் முறையும் உள்ளது. இது அனைத்தும் பறிபோகும் ஆபத்து ஏற்பட்டுள்ளது.

மருத்துவக் கலந்தாய்வு விசயத்தில் மாநில உரிமைகளை விட்டுத்தர மாட்டோம் என்று தமிழ்நாடு சுகா தாரத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் கூறியுள்ளது வரவேற்கத்தக்கது. ஒன்றியஅரசின் சதிக்கு எதிராக ஒட்டு மொத்த தமிழ்நாடும் அணி திரள வேண்டும்.

இவ்வாறு ‘தீக்கதிர்’ நாளேட்டில்கூறப்பட்டுள்ளது.

கழக இலக்கிய அணி துணைத்தலைவர் - முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்

# கவிச்சுடர் கவிதைப்பித்தன் 64 வது பிறந்தநாள் காணொலி வாழ்த்தரங்கம்!

## எஸ். இரகுபதி - திருச்சி என்.சிவா- சிவ.வீ.மெய்யநாதன்- ஏ.கே.எஸ்.விஜயன்- கோ.வி.செழியன்- கே.கே.செல்லபாண்டியன் பங்கேற்பு!

*புதுக்கோட்டை, ஜூன் 14 -* முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களால் “ இலட்சியக் கவிஞர்” என்றும், இனமானப் பேராசிரியர் அவர்களால் “கவிச்சுடர்” என்றும் போற்றப் பெற்ற கழகத்தின் முரசொலிக் கவிஞர், கழக இலக்கிய அணியின் துணைத் தலைவர், முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர் கவிச்சுடர் கவிதைப்பித்தன் அவர்களின் 64வது பிறந்த நாளையொட்டி, இன்று (14.6.2023) மாலை 6.30 முதல் 8.30 மணிவரை, இணையதளம் வாயிலாக, காணொலி வாழ்த்தரங்கம்,



தமிழ்நாடு சட்டத்துறை, நீதிமன்றங்கள், சிறைத் துறை மற்றும் ஊழல் தடுப்புத்துறை அமைச்சர் எஸ். இரகுபதி தலைமையில் நடைபெறுகின்றது.

தமிழ்நாடு சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன், புதுக் கோட்டை வடக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர், வழக்கறிஞர் கே.கே. செல்லபாண்டியன் நிகழ்ச்சியைத் தொடங்கி வைத்து வாழ்த்துரை வழங்குகின்றார்கள்.

கழக மாநிலங்களவை உறுப்பினரும், கழக கொள்கை பரப்புச் செயலாளருமான திருச்சி என். சிவா வாழ்த்திச் சிறப்புரையாற்றுகின்றார்.

மேலும் கவிச்சுடர் கவிதைப்பித்தனை வாழ்த்தி, தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்புப் பிரதிநிதி, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.கே.எஸ்.விஜயன், தமிழ்நாடு அரசு சட்டமன்றக் கொறடா முனைவர் கோவி.செழியன்,

கழக அயலக அணிச் செயலாளர், மாநிலங்களவை உறுப்பினர் எம்.எம். அப்துல்லா,

தலைமைக் கழகச் சொற்பொழிவாளர்கள், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் நெல்லிக்குப்பம் புகழேந்தி, புதுக் கோட்டை விஜயா, கழக இலக்கிய அணி துணைச் செயலாளர் கவிஞர் ஈரோடு இறைவன், கவிஞர் பெருமக்கள் நெல்லை ஜெயந்தா, ஆண்டாள் பிரியதர்ஷினி ஆகியோர் உரையாற்றுகின்றனர்.

நிகழ்ச்சியின் ஒருங்கிணைப்பாளராக இருந்து, தலைமைக் கழகச் சொற்பொழிவாளர், தொலைக்காட்சி அகட விகடம் புகழ், கவிஞர் நாகை நாகராஜன் நெறியாள்கை செய்கின்றார்.

கவிஞர் தமிழ் இயலன் தொழில்நுட்பப் பணிகளை இயக்குகின்றார்.

தமிழ்கூறும் நல்லுலகத்துப் பெருமக்கள் அனைவரும் இணையத்தில் இணைந்து நம் கவிச்சுடர் கவிதைப் பித்தனை வாழ்த்துமாறு அழைக்கின்றோம்.

# மயிலாடுதுறை அருகே மது குடித்து இறந்த இருவரும் சயனைடு கலந்து கொலை!

## ஆட்சியர் மகாபாரதி தகவல்!

*மயிலாடுதுறை,ஜூன்.14-* மயிலாடுதுறை அருகே மது குடித்து இறந்த இருவரும் சயனைடு கலந்து கொலை செய்யப்பட்டுள்ளனர் என ஆட்சியர் மகாபாரதி தெரிவித்துள்ளார்.

மயிலாடுதுறை மாவட்டம், குத்தாலம் வட்டம், தத்தங்குடி கிராமம், திருவாரூர் மெயின் ரோடு என்ற முகவரியில் வசித்து வந்த பழனி குருநாதன் (வயது 55) த.பெ. வேலாயுதம் மற்றும் தத்தங்குடி கிராம மஞ்சு நகர் பகுதியில் வசித்து வந்த பூராசாமி த.பெ. பாவாடை (வயது63) ஆகிய இருவரும் குத்தாலம் வட்டம், மங்கநல்லூர் கிராமம், திருவாரூர் மெயின் ரோட்டில் உள்ள பழனி குருநாதனுக்கு சொந்தமான கொல்லன் பட்டறையில் நேற்று முன்தினம் 12.06.2023 அன்று மாலை சுமார் 6.00 மணியளவில் இருவரும் மயங்கிய நிலையில் கிடந்ததை கண்டு அக்கம்பக்கத்தில் இருந்தவர்கள் அவர்களை மயிலாடுதுறை அரசு பொது மருத்துவமனையில் அனுமதித்து மருத்துவர்களின் பரிசோதனைக்கு பின்பு இருவரும் இறந்து விட்டதாக மருத்துவரால் அறிவிக்கப்பட்டது.

இருவரும் மயங்கி கிடந்த கொல்லன் பட்டறையில் இருவருக்கும் அருகில் மதுப்பாட்டில்கள் இரண்டு கிடந்தன.

மேற்படி கொல்லன் பட்டறை இறந்து போன பழனி குருநாதன் என்பவரால் நடத்தப்பட்டு வந்தது. அதில் இறந்த மற்றொரு நபரான பூராசாமி கடந்த மூன்று மாதங்களாக பழனி குருநாதன் என்பவருடன் வேலை செய்து வந்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக சம்பந்தப்பட்ட பெரம்பூர் காவல் நிலையத்தில் குற்ற வழக்கு எண். 250/2023/US 174 CRPC நாள்12.06.2023-ன் படி வழக்கு பதிவு செய்யப்பட்டு விசாரணையில் உள்ளது. இறந்த இரு நபர்களின் பிரேதங்களும் திருவாரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் உடல் கூறு ஆய்வு (PM) செய்யப்பட்டது. மேலும் திருச்சி மண்டல தடயவியல் துறை, துணை இயக்குநர் அவர்களின் முதற்கட்ட பரிசோதனை அறிக்கையின் படி இறந்த இருவரது இரத்தம் மற்றும் உள்ளுறுப்புகளில் (VISCERAL) சயனைடு (CYANIDE) கலந்திருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

இந்நிகழ்விற்கு பின்னணியில் பழனி குருநாதனின் சகோதரரான வே.மனோகரன் மற்றும் வே.பாஸ்கரன் (இருவரும் முதல் தாரத்தின் மகன்கள்) சொத்துத்தகராறு காரணமாக மதுவில் சயனைடு (CYANIDE) கலந்து கொலை செய்ய முயற்சித்துள்ளது கண்டறியப்பட்டு இருவரும் காவல் துறையினரால் கைது செய்யப்பட்டு மேல் விசாரணை நடைபெற்று வருகிறது. உடற்கூராய்வு அறிக்கையில் சயனைடு (CYANIDE) கலந்திருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

இச்சம்பவம் குறித்து காவல்துறையினரால் தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது என மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்துள்ளார்.




